சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 52 வது நிகழ்ச்சியாக சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்துசமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகித்தார். வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் முகாமினை துவக்கி வைத்தார். உடன் மேயர் பிரியா ராஜன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், பகுதிச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே.வாசு, மாமன்ற உறுப்பினர்கள் சுதாதீனன், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி: பரிசு வழங்கல்!

எம்.எஸ்.ஹரிபாபு தலைமையில் - எஸ்.பாஸ்கரன் பரிசு வழங்கினார் !

சென்னை, அக். 31 -

சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணர்களுக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.அரிபாபு தலைமையில் மாவட்டக் கழகப் பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்.சி. பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

தலைவர் கலைஞர் அவர்களின்நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு சென்னை தெற்குமாவட்டகலைஇலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் தரமணி சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்டதுணைஅமைப்பாளர் ஆ.மாகதேவன் தலைமையில், மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட தலைவர் ஆர். ஜாரு_ஆனந்த்,துணைதலைவர் வெ.புருஷோத்தமன், மாவட்டதுணைஅமைப்பாளர்கள் ஆர்.சுரேஷ், எஸ். மாரிமுத்து முன்னிலையில் பேச்சுப்போட்டி நடத்தப் பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சென்னை தெற்கு மாவட்ட பொருளாளரும் 178வது மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி எஸ். பாஸ்கரன் பரிசு வழங்கினார்.

அதுபோது 178 (அ) வட்டக் கழக செயலாளர் தே. கோபி, 178 வது வட்ட கழக செயலாளர் த.பார்த்திபன், மக்கள் குரல் நா.ஷாம்குமார், தலைமை ஆசிரியர் , ஆசிரியர் பெருமக்களும் , வட்ட கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் அமரம்பேடு ஊராட்சியில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டத்தில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் பொன்.ரமேஷ்கவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலை சரிபார்த்து

புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, அக். 31 -

தமிழ்நாடு முதல் அமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி,காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில், வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலை சரிபார்த்து புதிய வாக்காளர்களை சேர்க்கும் முக்கிய பணியில் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தேர்தல்பணிக்குழுஉறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் அனைவரும் இணைந்து, அவரவர் பாகங்களில் புதிய வாக்காளர்களை சேர்க்கும் இன்றியமையாப் பணியில் முனைப்புடன்ஈடுபடவேண்டும் என்று மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் தா. மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

இந்திய தேர்தல் ஆணையம் 1.1.2024ஆம் தேதியை தகுதியேற்படுத்தும்நாளாகக் கொண்டுதமிழகத்தில்உள்ள வாக்காளர்பட்டியலைதிருத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்காக வரைவுவாக்காளர்பட்டியல் அக்டோபர் 27ஆம் தேதி வெளியிடப்பட்டது.வரைவு வாக்காளர் பட்டியில் வெளியிட்டஅன்றையதினமேவாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும்பணிகளும்தொடங்கியது.

வெளியிடப்பட்டவாக்காளர் பட்டியலை பிரித்து அந்தந்தஒன்றியநகரபகுதிபேரூர் கழக செயலாளரிடம் வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலைஉடனடியாகஅந்தந்தஒன்றியநகரபகுதிபேரூர் கழக செயலாளர்கள் பாகம் வாரியாக பிரித்து, அந்தந்த பாகத்தில் அடங்கிய வார்டு கிளை செயலாளர்கள் மூலம் வாக்குச்சாவடி நிலை முகவர்களிடம் வழங்கி உள்ளனர்.

வாக்குச்சாவடி நிலை முகவர்கள்அந்தபாகத்தில்உள்ள தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள்,உள்ளாட்சிமன்றபிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழகத்தினருடன்இணைந்துவீடுவீடாகச்சென்றுஉடனடியாகவாக்காளர்பட்டியலைசரிபாக்கும் முக்கிய பணியில் ஈடுபட வேண்டும்.

அக்டோபர் 27ஆம் தேதி முதல் டிசம்பர் 12ஆம் தேதி வரைவாக்காளர்பட்டியலில் புதிய வாக்காளர்கள் இடம் மாறியவாக்காளர்கள்பெயர்களைசேர்த்தல்,இறந்தஇடம் மாறிய வாக்காளர்கள் பெயரை நீக்கம் செய்தல், பெயர் முகவரி மாற்றம் செய்யும் பணிகள் போன்ற திருத்தம் செய்யும் பணிகளை படிவம்6,6பி,7,8ஆகியபடிவத்தில் பூர்த்தி செய்து, அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் தந்திட வேண்டும்.

தமிழ்நாடு முதல் அமைச்சர்,கழகத்தலைவர்அண்ணன் தளபதிஅவர்களின்அறிவுறுத்தலின்படி,வருகின்ற2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி அன்று, 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில்இதுவரைஇடம்பெறாதவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின்பெயர்களை தற்போதுள்ளவாக்காளர்பட்டியலிலிருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மும்முரமாகமேற்கொள்ளவேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம் நவம்பர் 4.11.2023 சனிக்கிழமை, 5.11.2023 ஞாயிற்று கிழமை மற்றும் நவம்பர் 18.11.2023 சனிக்கிழமை 19.11.2023 ஞாயிற்று கிழமை ஆகிய 4 நாட்கள் காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாவட்டம் முழுவதும், அந்தந்தவாக்குச்சாவடிமையங்களில் நடைபெற உள்ளது.

மாவட்டம் முழுவதும், சாதாரணநாட்களில்வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், சிறப்பு முகாம்கள்நடைபெறும் 4 நாட்களில் வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளை கழக செயலாளர்கள், வாக்குச்சவாடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள்,உள்ளாட்சிமன்றபிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் இணைந்துஇருகரம்கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாடாளுன்ற தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம்செய்யும்பணிமிகவும்முக்கியமானது என்பதை கவனத்தில் கொண்டு கழகத்தினர் அனைவரும் இணைந்து இப்பணியைமுனைப்புடன்செய்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர்பட்டியல்திருத்தம் செய்யும் இச்சிறப்பு பணியில்மாநகரபகுதிஒன்றியநகர பேரூர் கழக செயலாளர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் நேரில் சென்று, கழகத்தினர், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்கு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் இணைந்துஇப்பணியைசிறப்பாக செய்கிறார்களா என்பதை கண்காணிப்பு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் என்றுமேலும்கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில்

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - சேர்த்தல் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருவள்ளூர், அக்.31-

திருவள்ளூர்மேற்குமாவட்டச்செயலாளர்திருத்தணிஎஸ். சந்திரன்எம்.எல்.ஏ.விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

கழகத் தலைவர், முதலமைச்சர்அவர்களின்ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திருத்தணி மற்றும்திருவள்ளூர் சட்டமன்றதொகுதிகளில்உள்ள வாக்குச்சாவடிஎண்கள்அடிப்படையில்வழங்கப்பட்டுள்ள புதியவாக்காளர்பட்டியலில் திருத்தம் செய்வது, இடமாற்றம் செய்வது, இறந்தவர்கள் மற்றும் நிரந்தரமாக வெளியூரில் உள்ள வாக்காளர்களை நீக்கம் செய்வது ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் 01.01.2024 அன்று 18 வயது பூர்த்தியாகவுள்ள புதிய வாக்காளர்களை அவசியம் சேர்க்க வேண்டும். புதியதாக பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6, ஆதார் விவரம் சேர்ப்பதற்கு 6பி, பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம் 7, எழுத்துப்பிழை, முகவரி மாற்றம் செய்தல் மற்றும் புதிய வாக்காளர்கள் அடையாள அட்டைபெறுவதற்குபடிவம் 8 பூர்த்தி செய்து வருகிற நவம்பர் 4 (சனிக்கிழமை), நவம்பர் 5(ஞாயிற்றுக்கிழமை)மற்றும் நவம்பர் 18 (சனிக்கிழமை), நவம்பர் 19 (ஞாயிற்றுக்கிழமை)ஆகியநான்குநாட்கள் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில்நடைபெறஉள்ளசிறப்பு முகாம்களை பயன்படுத்தி வாக்காளர் சேர்ப்பு மற்றும் இதர பணிகளில் ஒன்றிய, நகர, பேரூர்கழகசெயலாளர்கள், நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள்,கழகசார்புஅணிகளின்அமைப்பாளர்,துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,வார்டுவட்டகழகசெயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(BLA2),பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆகியோர்இணைந்துஇப்பணியை மிகுந்த அக்கறையுடன் செய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தஆண்டுநடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான இறுதிவாக்காளர் பட்டியல் இப்போது நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு அடிப்படையில்2024ஜனவரி 5அன்று வெளியிடப்படஉள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள வாக்காளர் இறுதிப் பட்டியலாக இருப்பதனால் வாக்காளர் சேர்ப்பில் அதிகமுக்கியத்துவம்செலுத்தவேண்டுமென கழகத்தலைவர்முதலமைச்சர் தளபதி அவர்களின் வேண்டுகோள் விடுத்துள்ளதை ஏற்று கழக முன்னணியினர் இப்பணியில் தீவிரமாக தங்களை ஈடுபடுத்திபணியாற்றவேண்டுமெனமாவட்டகழகச்செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கேட்டுக் கொண்டார்.

இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பம்மல் தெற்கு பகுதி வாக்குசாவடி முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம்!

பகுதிச் செயலாளர் வே. கருணாநிதி அறிக்கை!

சென்னை அக்:31-

பம்மல்தெற்குபகுதிகழகச் செயலாளர் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழ்நாடு முதலமைச்சர் கழகதலைவர்உத்தரவின்படி கழகஇளைஞர்அணிசெயலாளர்,அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலில் காஞ்சிபுரம்வடக்குமாவட்ட செயலாளர், அமைச்சர் தா. மோ.அன்பரசன் அறிவுறுத்தலின்படி

நவம்பர்-5 அன்று திருவள்ளூரில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் வாக்குசாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டத்தில் கலந்து கொள்வதுகுறித்தான ஆலோசனை கூட்டம் பம்மல்தெற்குபகுதி தி.மு.க.சார்பில் பம்மல்பகுதி செயலாளர் மண்டலக் குழு தலைவர் வே.கருணாநிதி ஏற்பாட்டில்பகுதிஅவைத்தலைவர் ப.காளீஸ்வரன்தலைமையில்,பகுதிபொருளாளர்ஆர். உமாசங்கர், பகுதி துணை செயலாளர்என்.பன்னீர்செல்வம்,பா.கவிதா,துரை இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா.டில்லி,மாநகர பிரதிநிதி பி.ஜே.வேந்தன், என்.கே. ரவிச்சந்தின், இரா.கந்தவேலு,ரா.கோகுல்ஆகியோர் முன்னிலையில் பகுதிக்கு அடங்கிய 88 பாகங்களில் உள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம் இன்று (31.10.2023 செவ்வாய்கிழமை)மாலை6.00 மணி அளவில்பம்மல்எஸ்.எஸ்.மஹால் திருமணமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்,மாவட்டதுணைசெயலாளர் இ.கருணாநிதி, பல்லாவரம்தொகுதிபார்வையாளர் மாநில மருத்துவரணி துணைசெயலாளர்ச.ரமேஷ், மாவட்ட கழகத்தினால் நியமிக்கப்பட்ட பார்வையாளர்கள் துணை மேயர் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ், மாநகர பிரதிநிதிசி.பார்த்தசாரதி,அ.ராமச்சந்திர ராஜா ஆகியோர் சிறப்புரையற்றி ஆலோசனை வழங்க உள்ளனர்.

இக்கூட்டதில்பகுதிகழகத்தால் நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள்துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு பகுதி கழக செயலாளர் வே. கருணாநிதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

6வது வட்ட கழக செயலாளர்வி.எஸ்.ஜெகநாதன்நன்றியுரையாற்றுகிறார்.

கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் நடைபெறும் நீட் தேர்வுக்கு எதிரான மாபெரும் கையெழுத்து இயக்கத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கையெழுத்தைப் பதிவு செய்தார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், ச. ஜெயபிரதீப், மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள் மாணவ – மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்திட்டனர்.

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மாநில இளைஞரணி செயலாளரும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தும் கையெழுத்து இயக்கம் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா தலைமையில் ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, இராயபுரம் பகுதி செயலாளர் இரா. செந்தில் குமார், பொதுக்குழு உறுப்பினர் வி.சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட மாநில நிர்வாகிகள் பகுதிகள் நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை வட்டச் செயலாளர் எல்.சீனிவாசன் செய்துள்ளார்.

தொகுதிப் பார்வையாளர் பிரபு - பகுதிப் பொறுப்பாளர் எஸ்.ராஜசேகர் சிறப்புரை!

துறைமுகம் கிழக்கு - 60 'அ' வட்ட பாகமுகவர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக்.30-

கழகத் தலைவர் - முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தலைவரும் சென்னை கிழக்கு மாவட்டச்செயலாளருமான பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படி துறைமுகம் கிழக்கு பகுதியில் 60 'அ' வட்டக் கழக பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள்ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொகுதிப் பொறுப்பாளர்பிரபு,துறைமுகம்கிழக்குப்பகுதிசெயலாளர் எஸ்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் ஆலோசனை வழங்கப்பட்டது.

60 'அ' வட்ட கழகச் செயலாளர் ஆ.நா.பார்த்திபன் தலைமையில்பாகமுகவர்கள் கூட்டம்சிறப்பாகநடைபெற்றது.

உடன் கழக நிர்வாகிகள் மற்றும் கழக செயல் வீரர்கள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும்

அலுவலர்கள் - மாமன்ற உறுப்பினர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்!

மேயர் ஆர். பிரியா சான்றிதழ்கள் - பரிசுகள் வழங்கினார்!

சென்னை,அக்.31-

பெருநகரசென்னைமாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள்மற்றும்மாமன்றஉறுப்பினர் களுக்கான 2023-24ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப்போட்டிகள் 09.10.2023 அன்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேருவால் நேரு பூங்கா விளையாட்டுத் திடலில்கொடியேற்றிதொடங்கி வைக்கப்பட்டது.

விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களைப் பாராட்டி மேயர் திருமதி ஆர்.பிரியா சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகளை நேற்று (30.10.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில்நடைபெற்றநிகழ்ச்சியில் வழங்கினார்.

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர்

அமைச்சர் சு.முத்துசாமி சம்பந்தி வி.கே.தங்கவேல் மறைவு!

கழகத்தினர் நேரில் அஞ்சலி!

ஈரோடு, அக். 31-

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகசெயலாளரும்,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறைஅமைச்சருமான சு.முத்துசாமியின் மகன் ராஜாவின் மாமனார் கோபி மூலவாய்க்கால் வி.கே. தங்கவேல் 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில் இயற்கை எய்தினார்என்கிறசெய்தியினை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு யசோதா என்கிறமனைவியும்,கிருத்திகா பெரியநாயகி என்கிற மகளும் உள்ளனர்.

அன்னாரின்மறைவுச்செய்தி யறிந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், அனைத்துக் கட்சிப்பிரமுகர்கள்அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (30.10.2023 - திங்கட்கிழமை) மதியம் 3 மணியளவில் கோபி மூலவாய்க்காலில் உள்ள அவரதுஇல்லத்தில்நடைபெற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் திருமுல்லைவாயிலில் நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ வருகின்ற 5 ஆம் தேதி கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் திருவள்ளூரில் நடைபெறும் பாக முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டத்தில் பங்கேற்பு குறித்தும் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் . உடன் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி தொகுதி பார்வையாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன்,ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், ம.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜெ.மகாதேவன், கு.விமல்வர்ஷன், வி.குமார், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், ஒன்றிய நகர பகுதி செயலாளர்கள் பேபி சேகர், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயணபிரசாத், பொன்.விஜயன், டி.தேசிங்கு, என்.இ.கே. மூர்த்தி, தி.வை.ரவி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் உள்பட கழக நிர்வாகிகள் மேற்பார்வையாளர்கள், பாக முகவர்கள் உள்ளனர்.